
கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் சுபேர்கான், தமது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (12.3.2025) செக் குடியரசின் தலைநகரான பிராக்கில் பிப்ரவரி 26 முதல் மார்ச் 7 ந் தேதி வரை நடைபெற்ற 7 வது பிராக் செஸ் திருவிழா 2025 ல் (The Prague Chess Festival2025) மாஸ்டர்ஸ் பிரிவில் வெற்றி பெற்ற கிராண்ட் மாஸ்டர் அரவிந்த் சிதம்பரம் சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் பெற்றோர் உடனிருந்தனர்.


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (12.3.2025) நுஞ்சாகு உபகரணத்தின் மூலம் 1 நிமிடத்தில் 159 முறை ”Nunchaku Back Handrolls செய்து கின்னஸ் உலக சாதனை படைத்த செல்வி. ஜான்சி ராணி லட்சுமி பாய் சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் பயிற்சியாளர் உடனிருந்தனர்.


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.3.2025) தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் சாதனைகளை படைத்து வரும் தடகள வீராங்கனை செல்வி, பி.எம். தபிதா அவர்களுக்கு, பயிற்சிக்கு தேவையான உபகரணங்களை வாங்குவதற்காக தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையின் மூலம் ரூ. 50 ஆயிரத்திற்கான காசோலையை வழங்கி வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.3.2025) ”Champions of Future அகாடமியால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த பைக் பந்தய வீரர் செல்வன். ரெஹான் கான் ரஷீத்க்கு தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையின் மூலம் ரூ. 5.00 லட்சத்திற்கான காசோலையை வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.



சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், சுற்றுலாத்துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி பணிகள் குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேற்று முன்தினம் (11.03.2025) ஆய்வு மேற்கொண்டார். இதில் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலயங்கள் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர்.கா. மணிவாசன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியின்கீழ்

# விளையாட்டு வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.5,50,000க்கான காசோலைகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மார்ச்.13-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியின் கீழ் விளையாட்டு வீரர், வீராங்கனை இரண்டு நபர்களுக்கு மொத்தம் ரூ.5,50,000 க்கான காசோலைகளை வழங்கினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.3.2025) 'Champions of Future' அகாடமியால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த பைக் பந்தய வீரர் செல்வன். ரெஹான் கான் ரஷீத்க்கு தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையின் மூலம் 5.00 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

தொடர்ந்து தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் சாதனைகளை படைத்து வரும் தடகள வீராங்கனை செல்வி. பி.எம். தபிதா அவர்களுக்கு, பயிற்சிக்கு தேவையான சாதனங்களை வாங்குவதற்காக தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையின் மூலம் ரூ. 50 ஆயிரத்திற்கான காசோலையை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

மேலும் செக் குடியரசின் தலைநகரான பிராக் (Prague) கில் பிப்ரவரி 26 முதல் மார்ச் 7 ந் தேதி வரை நடைபெற்ற 7 வது பிராக் செஸ் திருவிழா - 2025 ன் (The Prague Chess Festival - 2025) மாஸ்டர்ஸ் பிரிவில் வெற்றி பெற்ற கிராண்ட் மாஸ்டர் அரவிந்த் சிதம்பரம் தனது பெற்றோருடன் துணை முதலமைச்சர் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார். இதே நிகழ்வில், மாடம்பாக்கம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 9 ஆம் வகுப்பு பயின்று வரும் கராத்தே பயிற்சி பெற்ற மாணவி செல்வி. ஜான்சி ராணி லட்சுமி பாய் நுஞ்சாகு உபகரணத்தினை சுழற்றுவதன் மூலம் 1 நிமிடத்தில் 159 முறை 'Nunchaku Back Handrolls' செய்து 'கின்னஸ் உலக சாதனை' படைத்ததையொட்டி துணை முதலமைச்சர் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

இந்நிகழ்வுகளில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் பெற்றோர், பயிற்சியாளர்கள் கலந்துகொண்டனர்.

